



ஓலை 77| ஓசை 200| ஜூலை 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



200 வது

வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்**

## பொருள்

**தெய்வத்தின் அருளாலே கைகூடாது போனாலும்,**
**ஒருவனுடைய முயற்சியானது,**
**தன் உடல் வருத்தத்தின் கூலியைத் தப்பாமல் தந்துவிடும்.**


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# சாற்றுகவி

(நேரிசை ஆசிரியப்பா)

தந்தையின் தமிழை தலையில் சுமந்து
முந்தைய தொண்டை முடித்தான் செல்வமே!
சீர்சால் குறளின் சீர்மிகு முதற்குறள்
ஆர்க்கும் தலைப்பாய் அமைத்தே நடத்தி;
நற்றமிழ் தேன்சுவை நாவில் இனித்திட
கற்றவர் யாவரும் காவியம் படைத்திட;
அகமது குளிர வாழ்க!
அகர முதல இலக்கியத் தொண்டே!

அ.வில்சன்,இதழாசிரியர்

# தலையங்கம்

## நிறுவனர் உரை

அகர முதல இலக்கியப் பேரவையின் தூண்களான கவிஞர் பெருமக்களுக்கு, அகமகிழ்வோடு அன்பின் வணக்கங்கள்.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க, எட்டுத்திக்கும் சென்று, தமிழைச் சேர்க்கவேண்டும் வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தொடங்கி, எந்தவித எதிர்பார்ப்பின்றி, தமிழன்னையை மென்மேலும் பெருமையும் செழுமையும் அடைய செய்ய வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்தோடு தொடங்கப்பட்டதே நமது அகரமுதல இலக்கியப் பேரவை.

இன்றோடு 200–வது வாரத்தில் அடியெடுத்து வைப்பதில் மிக்க பெருமிதம். இம்மகிழ்வை வார்த்தைகளால் சொல்லி அடக்கமுடியவில்லை.

கன்னித்தமிழை கவியாய் படைத்து, தமிழுக்கும், தமிழன்னைக்கு எங்களோடு சேர்ந்து இந்நாள்வரை பயணித்த, பயணித்துக்கொண்டிருக்கும் அகர முதல இலக்கியப் பேரவை கவி உறவுகளுக்கு, என் நெஞ்சார்ந்த நன்றியும் பேரன்புகளும்.

கணினியோடும், கைப்பேசியோடும் அடிமை வாழும் இக்காலகட்டத்தில், அவற்றை நம் நண்பனாக்கி நல்ல தமிழை நாளும் பரவிட செய்து வரும், அகர முதல இலக்கியப் பேரவையின் கவிஞர் பெருமக்களுக்கு மனமுவந்த வாழ்த்துகள். உங்களின் கவிதை உளிகளால் மட்டுமே நமது பேரவை எனும் சிற்பம் மிக பிரகாசமாய் மிளிர்கிறது என்றால் அது மிகையாகாது.

# தலையங்கம்

## நிறுவனர் உரை

அகர முதல இலக்கியப் பேரவை எனும் 'கரும்பலகை'யில், அழகான கவிதைகளை எழுதி அழகுப்பார்க்கும், அத்துணை கவிஞர்களுக்கும், எங்களின் என் மனமார்ந்த நன்றி.

"முந்திப் பிறந்தயெம் முத்தமிழைச் சாகுமென
எந்தக் கயவன் இழிந்துரைப்பான்! எந்தாயின்
மொத்தச் சிறப்புகளை முன்னெடுத்து செல்லுதற்கு
வித்தகன்போற் பல்லோர் வரின்!" (பாவலர் மா. வரதராசன்)

பாவலர் மா.வரதராசனின் வரிகளை உண்மையாக்க, அகர முதல இலக்கியப் பேரவையோடு இணைந்து தமிழ்ப்பணியாற்றிட இருகரம் விரித்து என்றென்றும் வரவேற்று மகிழ்கின்றோம்!

இந்த மகிழ்வான தருணத்தில் நம்மோடு இணைந்து பேரவை தொடங்கிய நாள்முதல் இன்றுவரை எந்தவித எதிர்பார்பின்றி மிகச் சீறிய முறையில் நாளும் பகலும் பயணித்து வரும் தலைமை இதழாசிரியர் திரு.அ.வில்சன் மற்றும் இதழாசிரியர் குமர.தர்மசீலன் ஆகிய இரண்டு தூண்களுக்கும் மேலும் தங்களின் கவிதைகளை கணினி வடிமைப்பில் அழகுற வடிவமைத்து கொடுத்த திரு சூர்யா அவர்களுக்கும் என இம்மூவருக்கும் இந்த தருணத்தில் எனது மனமுந்த நன்றியையும் பேரன்புகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். இவர்கள் மூவருமின்றி இத்தகைய அரும்பணியை சிறப்புற செய்து முடிக்க ஒருபோதும் சாத்தியமில்லை.

"இனிமைத் தமிழ்மொழி எமது–எமக்கு
இன்பம் தரும்படி வாய்த்த நல் அமுது!"

இத்தகைய தேமதுரத் தேந்தமிழை,தீந்தமிழை நாளும் உலகமெல்லாம் பரவச்செய்வோம் வாருங்கள் என அன்பின் அழைப்பிதழை மீண்டும் தங்களின் கரங்களில் அளித்து வரவேற்று மகிழ்கின்றேன்.

<u>என்றும் தமிழ்ப்பணியில்,</u>

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

நிறுவனர்,
அகர முதல இலக்கியப் பேரவை மற்றும்
சிவம் அறக்கட்டளை.

# நன்மையே செய்க

பா வகை: பிரிமொழி நேரிசை சிலேடை வெண்பா
(பிரிமொழி நேரிசை இரட்டுற மொழிதல்)

ஒளியும் இருளாய் உடையுமோர் வாழ்வில்
அளிக்கும் வினைகளே ஆற்றும் - களிப்பை
உணர்ந்திடும் மெய்ப்பொருள் உச்சத்தில் ஏற்றும்
பிணையும் செயலதன் பின்

பொருள் 1 - ஒளியும் இருளாய் உடைய ஓர் வாழ்வில் நாம் செய்யும் செயலே நமக்கு இன்பத்தை தரும். அதை உணர்ந்து நடந்தால் நமது செயலே நம்மை உச்சத்தில் ஏற்றும்.



பொருள் 2 - ஒளியும் இருளாய் உடையும் நம்வாழ்வில் தீமையை செய்தால். நம் தீமைகளே களிப்புடன் நம்மை ஆற்றும். இதன் பொருள் உணர நம் செயல்களின் பின்விளைவு நம்மையே பின் சேரும்.

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயமுத்தூர்

# ஹைக்கூ

பாசிபடர்ந்த குளத்தில்
அங்குமிங்கும் மூழ்கியெழும் தாய்வாத்து
கண்டுபிடித்துச் செல்லும் குஞ்சுகள்

அனல்காற்று வீசும் பாலை
வைகறைக்கு நடைபயிற்சி மாற்றுகிறேன்
நீங்களுமா எறும்புகளே?



கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், துபாய்

# வென்று காட்டுவோம்

வாழ்க்கைப் பயணத்தில்
வாழுங் காலத்தில்

சோதனை வந்திடச்
சலிப்பினை அகற்று

மனதில் துணிவை
மலர்ந்திடச் செய்திடு

முயற்சியைப் பயிற்சியாக்கு
முனைந்தே பழக்கமாக்கு.

நீரோடு பாதையில்
நடுவே தடைகள்

நீரோ நிற்காமல்
கடந்து செல்லும்.

இலக்கினை அடைய
இடைஞ்சல் வரும்.

இடர்ப்பாடு கண்டு
இன்னலடையாதே.

பெரிய பாறையை
உருட்டும் அருவியாகிடு.

மணலைத் தொட
அலைகள் எழும்

தொடாமல் பின்னேகும்
தொடர்ந்து முன்னேறும்.

சிற்றெறும்புக் கூட்டம்
சிதறினாலும் அணிவகுக்கும்.

படியில் ஏறினால்
முன்னேற்றம் உண்டு.



பார்த்ததும் மலைத்தால்
பாதாளத்தில் வீழ்வோம்.

மேடேறல் சிரமமே
மேனோக்கு பார்வை

தன்னம்பிக்கை தரும்
தொடலாம் உச்சத்தை.

பொறுமை காத்தால்
பெறலாம் பாராட்டை.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

அகர முதல 200

# கவிதைத் துளிகள்

"தொப்புள்கொடி
அறுக்கப்பட்டு
முதல் அழுகை
கேட்கிறது
எங்கேயோ ஒரு மரம்
இறந்து கொண்டிருக்கிறது"

"வளைவதும் இல்லை
குனிவதும் இல்லை
கதவுகள்
கடமையைச்
செய்கின்றன"

"துளையற்ற
மூங்கில் காடுகளில்
செவிடாக இருப்பது
ஊனமல்ல"

"விழுந்தவுடன்
அக்கம் பக்கம்
பார்க்காமல்
உண்மையாக
அழுகிறது
குழந்தை"

"சப்தமற்ற இடத்தை
தேடுவதில்லை
அமைதியான மனதை
தேடுகிறது
தியானம்"



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

அகர முதல 200

# வாழ்வே வரமானால்!

வாழ்வே வரமானால்
வாழ்நாளெல்லாம் வசந்தமே.
வாழ்க்கை வசப்பட
வானமும் கூரையாகுமே.

மனதில் துணிவிருந்தால்
மகரந்தங்களும் மஞ்சமாகும்.
மந்திரங்களும் தந்திரங்களும்
மயக்க நிலையாகும்.

இன்றைகளும் இக்கணமும்
இப்போது வாழுமே.
நாளைகளும் தள்ளிப்போடல்களும்
நாணத்தால் ஓடுமே.



உழைப்பை நமபியை
உயர்ந்தோம் என்றாலே
உலகினை ஊர்வலமாய்
சுற்றி வரலாமே.

கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

18. உதயகுமாரன் அம்பலம் புக்க காதை

சித்திராபதி, மணிமேகலை பாட்டி
மணிமேகலை துறவு கண்டாள் அவள் பாட்டி சித்தராபதி
வீணாகிப்போனது அவள் வாழ்க்கை உள்ளம் கொதித்தாள்
மணி சத்தம் கேட்டு நெஞ்சு நடுக்குற்றாள், "விடமாட்டேன்"
"துணிமணி இல்லாத குடும்பமா இவளது , துறவறம் பூண?"

கோவலன் இறந்தபிறகு மாதவி பௌத்த பள்ளியில் துறவு
காவலன் இல்லையேல் இது நம் குலத்தொழில் இல்லையே
பாவலன் பாண் மகன் யாழானது அடுத்தவன் கை சேரும்
காவலன் இல்லையா பிறன் கை பிடிப்பதுதானே முறை

இது என்ன புதுசு கொம்பில் படரும் கொடி தனியாவது
அது தெரியாதா இவளுக்காகவே வாழும் உதயகுமரன்
பதுமையான மணிமேகலை பால் உயிர் வைத்துள்ளான்
வதுவை அவளை அவனோடு மணமுடிப்பேன் அறிக

நெஞ்சில் புகையெழ பெருமூச்சு விட்டு வீறுகொண்டாள்
வஞ்சினத்தை முடிக்க வெறியோடு அரண்மனை வந்தாள்
மஞ்சனையில் இருந்த உதயகுமரனை வணங்கி நின்றாள்
அஞ்சி நடுங்கும் தவக்கோலம் மணிக்குத் தேவையா என்றான்
( மணி: மணிமேகலை )



ஒப்பற்ற தனித்திரு அழகி மணிக்காஞ்சியை மறக்க முடியுமா ?
இப்பொழுதே சென்று அவளை மணந்துவா சித்திராபதி கூறினாள்
அப்பொழுதே மணிமேகலை இருந்த உலக அறவியை அடைந்தான்
தப்பவே முடியாதபடி பசி தீர்க்கும் மணிமேகலை முன் நின்றான்
(மணிக்காஞ்சி : மணிமேகலை)

இவன் முற்பிறவியில் என் கணவனாக இருந்த இராகுலன் ஆவான்
இவனை இப்பிறவியில் கணவனாக ஏற்றுக்கொள்ள வழி இல்லை
அவன் எண்ணத்தின் படி அவன் கைத்தளம் பற்றி வாழ இயலாது
அவனை விட்டு மெல்ல நீங்கி சம்பாபதி கோயிலுள்ளே புகுந்தாள்

அம்மையே என்னைக் காத்தருள வேண்டும் வணங்கி வேண்டினாள்
"நிம்மதி கொள்" உருமாறும் மந்திரத்தை ஓதியது சம்பாபதி தெய்வம்
இம்மியும் காத்திராமல் காயசண்டிகை வடிவுடன் வெளியே வந்தாள்
நிம்மதி இழந்த உதயகுமரன் சம்பாபதி தெய்வத்திடம் முறையிட்டான்

"முதிய தெய்வமே கேள் மணிமேகலை எங்கோ மறைந்திருக்கிறாள்
சதி நடப்பதுபோல் உணருகிறேன் அவள் இன்றி நான் விலகேன் ?
விதியின் செயல் அறிவேன் அவளை விட்டு விட்டுப் போகமாட்டேன்
முதிய தெய்வமே அவளைத் தந்தருள்" இறைஞ்சினான் உதயகுமரன்.

தொடரும் ...

கவிஞர் ந. திருக்காமு

# மலையகவலி

அன்றிலிருந்து இன்றுவரை
இருநூறு ஆண்டுகளாய்

தலைமுறை தலைமுறையாய் சுமக்கிறோம்
எம் முதுகில் தேயிலைத் தொட்டி

அட்டைக் கடிக்குதென்றும்
அரவம் தீண்டுதென்றும்

தேனீக்குளவி விரட்டுதென்றும்
அழுதான் புலம்புகிறோம்

அவலங்கள் தான் தீர்ந்தபாடில்லை
எம் விதிதானிதுவா
இறைவா!

கல்விகற்க நூல்கள் வாங்க
பிணித்தீர மாத்திரை வாங்க

அடுப்பங்கரை சாமான் சேர்த்தே
கடனும் கூடிதான் போகுது பாரு

மாசகூலி வாங்குமுன்னே
கங்காணி தொரகிட்ட முற்பணமும் கேட்டுபுட்டு
மாசகடைசியாச்சின்னா வயித்துல தீ பத்திக்கிது

பாயோட படுத்துக்கிட்டே நட்சத்திமும் எண்ணிடுவோம்
வீட்டினுள்ள இருந்தபடியே

மழைவந்தால் திண்டாட்டம் நடுநசியிலும்
தகரம் பறந்து வீடே குளமாய் போய்விடும்

மழைவந்தாலே ஒட்டிக்கொள்ளும்
மனஅச்சம் இன்றும் நீங்காதே இவ்வுள்ளச்சம்

மழைவந்தபின் தானே மலையும்
சரிந்துவந்து பல உயிர்கள் காவுப்போனது

அதை நினைத்தாலே உள்ளத்தீயில் வாடுது
மலையகம் என்பது பெயர்தானே

இங்கு வாழும் ஒவ்வொரு மக்கள் மனதிலும்
ஒர் மலையளவு வலிதானே.



கவிஞர் ஷியாஸ்னா பைஸல்,
நாவலப்பிட்டி (இலங்கை)

# கைவிடல்

மரம்
இலையை உதிர்க்க
நினைக்கலாம்.
இலையும் கீழிறங்கத்
துடிக்கலாம்.
அதைக் காற்று
அனுமதிக்க விழையலாம்.
அதை மண்
எற்க இசையலாம்.
எனினும்
இலையைக் காம்பு
கைவிட வேண்டும்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம்

# கண்ணிற் பாவையடி கண்ணம்மா



அன்பான அன்னமே
அழகான வண்ணமே

ஆனந்தம் பொங்குதே
ஆசையும் துளிர்க்குதே

இனிமையான தேவதையே
இதயத்தில் நிறைந்தாயே

ஈர்த்திட்டாய் என்னையே
ஈரமானது நெஞ்சமே

உள்ளத்தின் உணர்வே
உயிரான உறவே

ஊஞ்சலானது மனது
ஊடலில்லாக் குணத்தாலே

எழிலான நங்கையே
எண்ணங்கள் சிறகடிக்குதே

ஏந்திழையின் அம்சமே
ஏழிசையின் கீதமே

ஐக்கியமானாய் என்னுள்ளே
ஐயமில்லை எந்நாளுமே

ஒன்றாய் இணைந்தவளே
ஒருபோதும் பிரிவில்லையே

ஓராயிரம் வார்த்தைகளில்
ஓய்ந்திடாது பேசுபவளே

கனிவானப் பார்வையில்
கவிதையும் பிறக்குதே

கானமிசைக்கும் குயிலே
கார்மேகமாய்த் தவழ்பவளே

நீதான் கண்ணிற் பாவையடி
கண்ணம்மா

இமைக்கா விழிகளால்
இனிமைச் சேர்த்திடுவாயே

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன்,
விருதுநகர்

# சந்திப்பு

இரு இமைகளின் சந்திப்பு
இரு இருதயங்கள் சந்திப்பு
இரு இதழ்களின் சந்திப்பு
இரு உடல்களின் சந்திப்பு
இரு அணுக்களின் சந்திப்பு
ஒரு உயிருக்கு அது பிறப்பு



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு

# காலமெனும் போதி மரம்

காலம் வாழ்வில் முக்கியமான ஒன்றே
வரும் போதே பிடித்துக் கொள்
கடிகாரம் ஓய்வு இல்லாமல் சுழல்கிறது
காலத்தின் ஓட்டம் ஓட்டமாக ஓடுகிறது

பார்க்கும் நேரம் மீண்டும் வராது
வருவதற்கு முன்பே நீ தயாராகிடு
வாழ்க்கையின் ஓட்டத்திற்கு ஓய்வு இல்லை
இறுதி மூச்சு வரை ஓடணுமே

இன்பம் துன்பம் மாறுவது வாழ்க்கை
காலமும் நேரமும் ஒன்றால் கிடைப்பது
வெற்றி என்ற பெரிய கனி
கிடைத்தால் சுவையோடு இன்புற்று வாழலாம்

பருவத்தை அறிந்து பயிர் செய்
விதையை நன்றாக விதைக்க பார்
வளரும் பயிர்கள் நன்றாக வளரட்டும்
பிரச்சனைகள் எல்லாம் தீர்வு காணட்டும்



வாழ்க்கையை வாழ்ந்துப் பார்த்தால் தெரியும்
நா எதையும் பேசும் அதை
நீ கண்டிராதே உன் எண்ணத்தை
சிந்தனை ஆக்கி சிறப்பாக செயலாற்று

கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம்,
நாகர்கோவில்

# காட்சிப் பிழை

நன்னயம் தவறும் பெண்ணியம்
பொழிப்புரை பிழைகள்.
பெருகும் தருக்க முரண்பாடுகள்.
சொற்குற்றம் நீக்கி
மெய்ப்பொருள் தேடு.

காடும் மலையும் மரமும் செடியும்
கொடியும் ஆறும் அறுந்து நிற்க
பறவையும் யானையும்
இருப்பிடம் தேடித் திரிகிறது.

நீர்த்தடம் அறுத்து
பூங்கா அமைத்த மன்றம்.
கைகட்டி நிற்க செய்த மழை.


கழிவு அகற்றல் கோளாறு
பாதை கடக்க வழியில்லை
தவிக்கும் மக்கள்.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# அழகியல் தரிசனம்

உலகம் மகிழ்ச்சியானதாக,
இரசனைக்குரியதாக,
அனுபவிக்கப் போதுமானதாக
எல்லோருக்கும் சமமானதாகவே
இருந்து கொண்டிருக்கிறது.



அன்றாட வாழ்க்கைப் பாடுகளுடன்
வாழ்நாளை விரும்பி
கரைத்துக் கொள்கிறார்கள் பலரும்.

ஒப்பீடுகளை பலப்படுத்தி
தங்களைத் தங்களோடு மட்டுமே
அடையாளம் கண்டு கொள்கிறார்கள்

வெளிப்படுத்திக் கொள்வதில் தொடங்கி
பொருத்திக் கொள்பவர்களாக இருப்பவர்கள்
வெளிப்படுத்தலில் இருக்கும் ஆர்வத்தால்
விடுவித்துக் கொள்ளாதவர்களாக
மாறிப் போகிறார்கள்.

பொது மனப்பான்மைக்கு இணையாக
சுயத்திற்கு மாறான நிலை கொண்டு
அர்த்தங்களையும், அனர்த்தங்களையும்
புதிய அழகியலென
வரையறுத்துக் கொள்கிறார்கள்.

கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

# மடி இன்மை (அதிகாரம் 61)

நற்குடியெனும் மங்காவிளக்கு
மடியெனும் சோம்பலால்.
மாசுபடர்ந்து ஒளிமங்கி
கெடுமாம் ஒருவர்க்கு.

தன்குடியது நற்சிறக்க
விழைகின்ற ஒருவன்.
தனக்கான சோம்பலழித்து
முயற்சியாளனாய் திகழ்தல்நலம்.

தன்னழிக்கும் சோம்பலை
தன்னகத்தேகொளும் அறிவிலான்.
தன்குடிப்பெருமை அறியும்முன்
அக்குடியே அழிந்துபோம்.

முயற்சிமறந்து சோம்பலாழ்ந்து
வாழ்வோரின் குடிப்பெருமை.
நாள்தோறும் கெட்டழிந்து
குற்றமும் பெருகியோங்கும்.

காலந்தாழ்த்தல் மறதியொடு
சோம்பலுறக்கம் இந்நான்கும்.
அழிந்துபோவோர் விரும்பிஏறும்
அகன்ற மரக்கலமாம்.

நாடாளும் மன்னன்வந்து
தன்னோடு இணைந்தாலும்.
தன்கெடுக்கும் சோர்வுடையோனுக்கு
பயன்கிடைக்கப் பெறாதாம்.

சோம்பல்விரும்பி முயற்சிமறந்து
வாழ்வோர் பிறரால்.
இடித்துக்கூறும் இடிசொற்களை
ஏராளம் கேட்டுநோகுவர்.

நற்குடியில் பிறந்தோனிடம்
சோம்பல்வந்து சேருமானால்.
அஃதவனை பகைவர்க்கு
சடுதியில் அடிமையாக்கும்.

ஆணழிக்கும் சோம்பலொழிக்க
ஒருவனால் கூடுமாயின்.
அவன்குடியின் குற்றங்கள்
ஆங்கிருந்தே நீங்கிவிடும்.

திருவடியால் தாவித்தாவி
திருமால் அளந்தநிலமெலாம்.
சுறுசுறுப்பால் ஒருவன்
ஒருசேரப் பெற்றிடுவான்.




கவிஞர் ஆன்றனி ஜமுனா,
நாகர்கோவில்



அகர முதல 200

# புது பயணம்

தலை மேல்
கூடையைத்
தூக்கிக் கொண்டு
தினம் தினம்
புது பயணம்
பசி தீரும்
வாழ்க்கையைத் தேடி



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ,
விருதுநகர்

# தந்தை

தாய் என்பவள்
நம்மை கருவில் சுமக்கும்
தெய்வம் ஆகிறாள்.
பிறந்தது முதல் ஆயுள் வரை
மனதில் சுமக்கும் தெய்வம்
தந்தை.
சில நேரங்களில்
வெறுப்பை காட்டும் போதும்
அதில் எத்தனையோ அக்கரையும்
ஒளிந்து கிடக்கிறது
வெறுப்பு மட்டுமே
நம் கண்ணுக்கு முன்னால் தோன்றும்.
ஆனால்
கண்களில் கோபத்தையும்
நெஞ்சிலே பாசத்தையும் காட்டுபவர்
தந்தையே!



கவிஞர் டிரோன், மருஸி(இலங்கை)



அகர முதல 200

# அண்ணன்-மகன்

நான் தூக்கி வளர்த்த
முதல் குழந்தை நீயடா.

உன் புன்னகைக்காக
கோமாளி வேசம் போட்ட அத்தையடா நானடா.

உன் வாசனை எனக்கு என்றுமே
நறுமணப் பொருளடா தங்கமே!

பள்ளிக்கு முதன்முதலில் நீ சென்ற போது
கண்ணீர் துளிகளுடன் உன் வருகைக்காக
காத்து இருந்த- அத்தமா நான்.

இப்பவரையும் உன்னை யாராவது திட்டினால்
என் கண்ணீல் கண்ணீர் துளிகள் வந்து
நிரம்பி வழிகிறது- தங்கப்பிள்ளை.



நீ முதன்முதலில் அழைத்த சுயா அத்தை
அந்த வார்த்தை என்றும் எனக்கு இன்னிசையே!

எனக்கு எப்போதும் என்னுடைய
முதல் குழந்தை நீதானடா கவிமா.

என்றும் உன் பாசத்திற்கு
இந்த சுயாஅத்தை அடிமைதான் தங்கமே!

கவிஞர் பெ. சுரேகா, திண்டுக்கல்

# அடக்குமுறை ஒழித்து திடமென வெளியேறு

அகர முதல 200

அவர்கள் அப்படித்தான் சொல்லிக்கொள்வார்கள்
இப்படியும் சொல்ல முனைவார்கள்
ஏதொன்றை திணிக்க நினைப்பார்கள்.
பெண்ணாக பிறந்தால் மண்ணாகும் வரை
அடங்கியும் முடங்கியுமோ தான் கிடக்கனுமோ ?

அப்படித்தான் பழைய தலைமுறைத்
தலைமைகள் சொல்லிச் சொல்லி அடக்கி வளர்க்க
வளர்ந்த யாவரும் தன் தலைமுறையையுமே அடக்கி ஒடுக்க
நானும் அச்சிறையில் பிறந்த ஓர் அறைப்போலதான்

வெற்றுச்சிற்ப கற்பாறையாய் கிடந்தேன்
சுடுமணலென்றாலும் குளிர்க்காற்றென்றாலும்
வாய்ப்பொத்திருக்கவே பழகிருந்தேன் ..
பிடிப்புக்குள் சிக்குறும் போதெல்லாம் வெளிப்படுத்திட
வழியிருந்தாலும் பயமெனும் சிறைக்கைதியாகி நின்றிருந்தேன்.



எழுந்தேன் துள்ளியமாய் எண்ணங்களை வரிகளாக்க
வடிவங்கள் தளங்கள் தர தோழமைகளும் நிறைந்திட
சதிராட்ட குவியல் களைந்ததோ
எனக்கு நான் யாரென்று காட்டி விட்டு மறைந்ததோ
நகைப்பாய் தோன்றிய யாவையும்
கவிக்குள் பொருத்தி களைத்த தருணத்தையும்
சோகித்த தருணத்தையும் கவிக்குள் பொருத்தி பார்த்தேன்

மூச்சொன்றாகி முழுமூச்சாகி எனை அசைத்து பார்க்கிறது.
அச்சமோமுழுதாய் மாறாது போனாலும்
வாய்பென்றாலுமே வெற்றி தோல்வி என்றதை
காணாது களம் குதித்தெழுகிறேன்.
குரல் தந்து குரலிசைத்து குரலாளினியாகவும் மிளிர்ந்து பார்க்கிறேன்.
என் கடந்த ஊமை பக்கம் திருப்பி பார்த்து
நாட்களை வீணாக்கியதை உணர்கிறது மனது
திறமை இல்லா மனிதமில்லை
மனமிருந்தாலே வழிகள் புலப்படும்.

கவிஞர் சஹ்னாஸ் பேகம்,
முதலைப்பாளி, புத்தளம்

# மதி மழுக்க விலக்கு

மதி மழுங்கிய ஒரு பொழுதில்
அவள் கையில் கூர்மையான
ஒரு கத்தரிக்கோல் கிடைத்தது

தோட்டத்துப் பூக்களைக் கத்தரித்து
தன் கருத்த கூந்தலில் சூடி
அழகு பார்க்கிறாள்

நீளமான வெற்றுத்துணியைக் கத்தரித்து
தனக்கேற்ற வடிவில் தைத்து
அழகிய ஆடை அணிந்தாள்

வண்ணக் காகிதங்களைக் கத்தரித்து
பூக்கள் கைவினை பொருள் செய்து
அறையை அலங்கரித்தாள்

இத்தனைக்குப் பின்னும்
மதி மழுக்கம் மதி மயக்கமாக
முன்னேறாதே இருக்க
சில நினைவு நரம்புகளைத் தேடி
கத்தரிக்கத் துவங்கினாள்



பூரண மதி மழுக்க விலக்கு
அமலுக்கு வந்ததெல்லாம்
எப்போது அந்த கத்தரியை வைத்து
சிலரின் கருத்துப் பிடியைக்
மனதை விட்டு கத்தரித்தாளோ
அப்போதுதான் நிகழ்ந்தது.

கவிஞர் முத்து மீனாட்சி

# அந்த காலம்

கவலைகள் தெரியாத துன்பங்கள்
தொடாத அழகான காலம்
புத்தகத்தின் முகவரியாய் முகங்கள் மாறி
போனாலும் நட்பு நங்கூரமாய்

ஆசிரியரின் அரவணைப்பில் அன்பின்
சிறகுகள் புன்னகையாய்
நண்பனின் கரங்களில் நட்பின்
ரேகைகள் பத்திரமாய்

கிழிந்த உடைகளுடன் உற்சாகத்தின்
உறவுகளாய் நண்பர்கள்
பள்ளி சீருடையில் மதங்கள் அவிழ்க்கப்பட்டு
மனிதம் ஆடைகளாய்



பள்ளிக்கூட புழுதியில் எங்களின்
நினைவுகள் நிஜங்களாய்
இரட்டை சடையுடன் தோழிகள்
பள்ளியின் வானவில் தோரணங்களாய்

பாலினம் தெரியாத பட்டாம்பூச்சிகளாய்
வகுப்பறையில் நாங்கள்
பள்ளிக்கூட ஞாபகங்கள் பலருக்கும்
இறந்த கால வசந்தங்களாய்

மரணம் வரை மறக்க முடியாத பயணத்தின்
கைகாட்டி மரங்களாய் பள்ளிப் பருவம்.

கவிஞர் ரா. பிரேம் சுரேஷ்,
கோத்தகிரி

# வேழம்

வேழத்திற்கும்
ஆழமான
அன்பு உண்டு.
நேசத்துடன் நீட்டும்
தும்பிக்கையில் அறியலாம் பாசத்தை.



உருவத்தில்
இமயமானாலும்
உள்ளத்தில்
அன்னையின்
அன்பை விஞ்சுமிந்த
அஃறிணை.

உறவுகளை
ஒன்றிணைத்து
கூடிவாழ்வோமென்று
தேடி அழைக்கும்.

துன்புறுத்தாதவரை
தூய்மையன்பு காட்டும்
தொல்லை கொடுத்தால்
துரத்தி ஓட்டும்.

மத்தகத்தைத் தாழ்த்தி
மண்டியும் இடும்
மகா வலிமையைக் காட்டி
மலையையும் பிளந்து விடும்.

இனத்தைக் காத்து
மனத்தை மகிழ்விக்கும்
ஐராவதங்களிடம் கற்கலாம்
அழகிய வாழ்வியலை.

கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன்,
கோவை மாவட்டம்



அகர முதல 200

# விருப்பக் கருணை மரணம்

## தன்முனைச் சாரல்

வருங்காலத்தில் நாம் புது விதமான ஒரு நிகழ்வை காண இருக்கிறோமா?எழுபத்தைந்து எண்பது வயது,நல்ல ஆரோக்கியமான போதுமான செல்வம் இருந்தும், தன் மக்களின் வாழ்வில் ஏற்ற இறக்கம் காணச் சகியாமல் மக்கள் மேலை நாடுகளில் உள்ளனர்.இருந்தது; போதும் என்ற சலிப்புடன் சில நாடுகளில் அவர்கள் உயிர் துறக்க, மருத்துவ ரீதியாக உதவுகின்றனர். இவர்களுக்கு தன் இச்சையாலே மரணம் தழுவும் நல்வாய்ப்பு நல்கப் படுகிறது. இதற்கு அந்த மனிதரே விண்ணப்பம் செய்ய வேண்டும். அதற்கு முதலும் முழுமையுமான தகுதி; அவர்கள் இன்றையத் தேதியில் மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் எந்த ஒரு குறைபாடும் இல்லாமல் இறுதிநோயால் பாதிக்கப்பட்டு இருக்கலாகாது.

தகுந்த மருத்துவ கட்டணம் செலுத்தினால் வலியில்லாமல் மரணம் தழுவ முடியும்.

என் வினா இதுவே

1.வாழ்க்கை போராட்டங்களை எதிர்கொள்ள வலிமையற்றதினாலா... அல்லது கடந்த கால ஏமாற்றங்கள், தோல்விகள் அவர்களை இந்த முடிவுக்குத் தள்ளியிருக்கிறதா?

2. இதற்கு அந்த மனிதருக்கு சட்டபூர்வமாக அவர்களின் குழந்தைகள், இணையரின் அனுமதி தேவையில்லை. அவர்கள் இதை எவ்விதம் எதிர்கொள்வார்கள்? சமூகம் அவர்களிடத்தில் எழுப்பும் வினாக்களுக்கு அவர்களால் குற்ற உணர்வு இல்லாமல் விடையளிக்க இயலுமா?

விரும்பாத வாழ்வை
தானே துறப்பது சரியா

விரும்பி ஏற்கும்
மரணம்? இது சரியா



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# ஆறுதல் தரும் மாறுதல்

சிலவேளைகளில்
உனக்கான ஆறுதல்
ஒரு பாடலை இரசிப்பதிலாய்
இருக்கலாம்

சில நிமிடங்கள்
தனிமையில் கண்மூடி ஓய்வெடுப்பதிலாய்
இருக்கலாம்.

ஆற்றோரமாய்
அமர்ந்து நண்பர்களோடு
அரட்டை அடிப்பதிலாய் இருக்கலாம்

கடலோர மணலில்
கால் நனைய
காற்றை சுவாசிப்பதிலாய் இருக்கலாம்

வெற்றுத் தாளில்
விரல்கள் பேச
உணர்வுகளைக் கிறுக்குவதிலாய்
இருக்கலாம்.

இயற்கைச் சூழலில்
சில மணிநேரம்
சிந்தை குளிர்வதிலாய் இருக்கலாம்.



உழைத்திங்கு
பிழைத்திருக்கத் தானே
இத்தனை போராட்டங்கள்.

வாழ்க்கையை
வாழ்வதில் பிரதியீடுகளும்
பிரதிபண்ணல்களும்
தேவையில்லை.

நெறி பிறழாத
நேர்வழி உனதானால்
சாத்திரங்கள் யாவும்
வெறும் சூத்திரங்களே.

ஆறுதலுக்காய் ஒரு
மாறுதல் தேவைப்படின்
காலம் தாழ்த்தாதே.

மன ஆறுதலில்
கிடைக்கும் மாறுதலில் உண்டு
உன் வாழ்வின் ஆரோக்கியம் .

கவிஞர் செண்பகச் சோலையாள்
ஆய்ஷ், கம்பளை



அகர முதல 200

# என்னைப் பற்றி நான்

நான் நானாக இருக்க
கங்கை நீர் புனிதம்தான்
அதனால் கிணற்றினை
வீண் என்று அர்த்தமில்லை
ஆகையால்
நான் ஒன்றுக்கும் தகுதி இல்லை
என்னை நான் ஏன் எண்ண வேண்டும்?

தாகத்தை தவிப்பதற்கு கங்கை இருந்தால் என்ன ?
கிணற்று நீர் இருந்தால் என்ன?
நான் நானாக இருக்க;
ஆகாயம் போல் பூமி இல்லைதான்
வாழ்வதற்கு உகந்த இடம் பூமி தான்;



நான் நானாக இருக்க!
இதில் வெட்கப்பட ஒன்றும் இல்லை!
இதில் வருத்தப்பட எதுவும் இல்லை!
இதில் பாவம் எதுவும் இல்லை!

நான் நானாக இருக்கும் பொழுது
பல மாற்றங்களை தயங்காமல் செய்ய முடியும்;
மாற்றங்கள் முன்னேற்றங்களாக மாறி
தன்னம்பிக்கை தருவதை என்னுள் நான் காண்கிறேன்
நான் நானாக இருக்க என்னால் மட்டுமே முடியுமென்று
எனக்கு தெரியும் நான் நானாக இருந்தால்
சந்தோஷத்தை நான் தேடிப்போக
தேவையில்லை என்பதை உணர்கிறேன்

கவிஞர் ஜெ. தேவிராஜசேகர்,
சென்னை

# சுதந்திரம்

கொஞ்ச நேரம் நகைக்கிறேன்
கூடுதல் தடவை அழுகிறேன்
நெஞ்சம் முட்டி உடைகிறேன்
நெட்டுயிர்த்துக் கொள்கிறேன்
சுதந்திரமாக மூச்சு விடுகிறேன்
சுத்தமாக உலகை மறக்கிறேன்
ஆசைகளை எல்லாம் கொட்டுகிறேன்
ஆவல் மிகுதியைக் களைகிறேன்
முற்றுமுழுதாக மூழ்குகிறேன்
முடிவிலாத் தேடல் கொள்கிறேன்
தட்டுத் தடுமாறி உடைகிறேன்
தாகம் தீர்த்துக் கொள்கிறேன்
எட்டா நிலவைப் பிடிக்கிறேன்
எரிக்கும் சூரியனை அணைக்கிறேன்
கோபம் எல்லாம் தணிக்கிறேன்
குரங்காய் எண்ணம் தாவுகிறேன்
தட்டான் போலப் பறக்கிறேன்
தட்டாமாலையாய் சுற்றுகிறேன்
எண்ணியது எல்லாம் நிகழ்த்துகிறேன்
என் கவிதையில் சுதந்திரத்தை நுகர்கிறேன்



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்(இலங்கை)

# காத்திருக்கிறது நிலா

மனிதா விலங்கிட்டு கொண்டே
விடுதலை கேட்கிறாய்
வேடிக்கையாய் இருக்கிறது
காற்றை அழித்தபின்
தென்றலைத் தேடுகிறாய்
மரங்களை வெட்டிக் கொண்டே
மனிதத்தை போதிக்கிறாய்
காடுகளை இரையாக்கி
கட்டிடங்களில் இளைப்பாறுகிறாய்
வாகனங்களில் வரும் புகை
வானத்தை மூடிய பின்
ஓசோனுக்குள் ஓட்டை போட்டு
உயிர்களுக்கு எச்சரிக்கிறாய்
பாலித்தீனில் பார்சல் வாங்கி
வயிற்றுக்குள் திணித்துவிட்டு
எஞ்சியவைகளை எரித்துக் கொண்டே
சுவாசிக்கத் திணறுகிறாய்
ஒலியை மிஞ்சும் விமானங்கள்
வானத்தை முத்தமிடும் புகைவண்டிகள்
எரிவாயு வாகனங்கள் என
அறிவியலின் ஆழம் கண்டு
அழிவினைப் பிரசவிக்கிறாய்
மாசு எனும் மணலை வாரி
தலை மேல் அல்ல
தனக்குள்ளே போட்டுக்கொண்டே
தத்துவங்கள் பேசுகிறாய்
விழித்துக் கொண்டே விரல் இடுக்கில்
விஷக்கத்தி வைத்து
விழிகளைக் குத்துகிறாய்

இன்னும் எதைக் காவு கொடுக்க
பிறக்கும் மழலைகள் முதுகில்
சுவாச சிலிண்டர் தொங்கவிடலாம்
ஆயினும் என்ன
காத்திருக்கிறது நிலா
உன் காலடிக்காக!



கவிஞர் இளையவன் சிவா,
நரசிங்காபுரம்



அகர முதல 200

# வேள்வித்தீ

அசோகவனத்தில் அயலானின்
சிறையில் சீதை!
தன்னை நிரூபிக்க
அக்னியில் பிரவேசித்தாள்!
வேள்வித்தீயிலேயே பிறந்தவளை
துகிலுரித்தான் துச்சாதனன்!
துருபதன் கன்னியின் கோபம்
உருவானது பாரதம்!
தன் கணவன் கள்வன்
என்ற தீர்ப்பிற்கு பொங்கிய
கண்ணகியின் சாபம்
பற்றி எரிந்தது மதுரை!
யுகயுகமாய் பெண்கள்
வேள்வித் தீயில் ஆகுதியாய்
தனையிட்டு சாம்பலாகப் போவது
யாரிடம் தன்னை நிரூபிக்க?
தனக்கெதிரான சமூகத்தில்
பெண்மையைக் காத்திட
கண்ணகி போல் சக்தி
கொண்ட பெண்ணாய் மாறிட!
வையகம் தழைத்திடும்!
மங்கையர் வாழ்வு மலர்ந்திடும்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,
சென்னை 119



அகர முதல 200

# தாயெனும் தெய்வம்

கருவினைச் சுமந்ததும்
கனவுகளில் மிதந்தே
சருகாய்க் காய்ந்தாலும்
சக்தியைத் தருவாளே

பிள்ளையின் நலனில்
பிரியத்தைக் காட்டுவாளே
அள்ளி அணைத்து
அன்பைப் பொழிவாளே

கல்விக்கு ஆசானாய்
கண்ணைத் திறப்பாளே
சொல்லும் சொற்களில்
சொர்க்கம் அளிப்பாளே

நகமும் சதையுமாய்
நல்லாட்சி புரிவாளே
அகத்தில் ஆழமாய்
அரவணைத்துக் காப்பாளே

பிஞ்சு மனதில்
பிறைநிலவாய் தோன்றுவாளே
அஞ்சாது நடக்க
அனைத்தும் ஊட்டுவாளே

சக்தியின் ரூபமாய்
சாதிக்க வைப்பாளே
தக்க சமயத்தில்
தன்னம்பிக்கையாய் இருப்பாளே

உலகில் தாயே
உன்னதப் பலமே
பலனை எதிர்பாராத
பாசத்தின் பிணைப்பே

உயிரை உருக்கி
உயிர் கொடுப்பவளே
தாயெனும் தெய்வம்
தரணியின் மந்திரமே



கவிஞர் கிருஷ் அபி

# அழகு

பகல் பொழுது சூரியனின்
பகிர்ந்திடும் ஒளியழகே
பங்கமில்லா இயற்கையிலே
பகையில்லா கொடையழகே!



பசும்பல்வெளியிலே
பனித்துளி நிற்கும் பேரழகே
பச்சைப் போர்த்திய மலைமுகட்டிலே
பஞ்சாய் பொதி மேகங்களும் அழகே

பசுக்கள் மேயும் வயல் வெளியிலே
பசுங்கன்றின் பாசமும் அழகே
பணி செய்யும் உழைப்பாளரின்
பணிவன்பான மரியாதையும் அழகே

பருவத்திற்கு பருவம் காய்க்கும்
பல்வேறு காய்களின் சத்தும் அழகே
பலுவான சுமை தூக்கும்
பலசாலி கூலி தோழர்கள் வியர்வை அழகே

பழைய பழக்கங்களிலே தமிழரின்
பண்பாடும் கலையழகே
பதமாக இனிக்கவே கனியும்
பழங்களின் வண்ணமழகே

பழம் புராணாங்களின் தமிழ் உருக்கள்
பலமான கல்வெட்டும் சொல் அழகே
பள்ளிச் செல்லும் பிள்ளைகளின்
பட்டாம்பூச்சியாக பறந்து செல்லும் அழகே

பந்தமாக உறவுகள் கூடவே
பந்தலிட்டு விழாவும் சிறப்பழகே
பயமில்லாமல் வானில் திரியும்
பறவைகளின் ஒழுங்கும் அழகே

பற்றோடு ஒன்றோடொன்று பிணைந்த
பரத நாட்டில் எல்லாமே அழகே
பரந்த வெளி பார்த்து
பரவசமாகும் நல் மனித மனசும் அழகே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# சில்லறைகள் சிரிக்கின்றன

கையி லொன்று உடன்
அவள் இடுப்பி லொன்று;
கட்டிய வன்வந் துறங்க
கட்டிய நல்வீடு இல்லை.

சாட்டை அடி வாங்கி
கையில் தட்டு ஏந்தி
குலுங்க குலுங்க கேட்க
சில்லறையும் நகைப்பும்.



நாளொன்றுக்கு நூறு
அவள் காணும் மக்கள்
சிரிப்பவர் பலர் - இங்கு
இடையைத் தொடுபவர் சிலர்.

தாண்டித்தான் வருகிறாள்
நினைவிழந் துவரு கிறாள்.
குறு வீடு வந்ததும்
தலைவனோடு சல்லாபம்.

படிக்கலாமே பிள்ளைகள்
உதிர்த்தவன் உத்தமன்.
சேர்த்திருந்தால் அவள்
பிள்ளை மாணவனோ?

அரசெ டுக்கும் முயற்சி
அளவாக ஆய்ந்தெடுத்தாலும்
அரிதாகச் செல்கிறது
சாலை யோர மங்கைக்கு.

சில்லறை நகைக்கிறது
குழந்தையின் பல்லோடு சேர்ந்து

கவிஞர் சி. வே. முத்துச்செழியன்,
மதுரை

# நியாயமற்ற பொழுதுகள்

வழிய வழிய தன்னை
நிரப்பிக் கொள்ளும்
சொற்களில்.



மனதை ஆரத்தழுவித் தனை
செலவு செய்யத் துணியாது
தேர்ச் சக்கரம்போல்
முட்டுக்கு பணிந்தபடி நகரும்.

மகத்தான அன்பு
தன்னை சரியானபடி
அறிமுகப்படுத்த யியலாத வரை
கடிந்து வாழ்தலின்
கனமிக்க பொழுதாகிப் போகும்

தனித்து விடப்பட்டும்
தனித்தறியாத பொழுதுகள்
தனித்தனியே தின்றும்
தன்நிலை வழுவாப் பொழுதினை
தன்வசப் படுத்தவே முனையும்!

கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81



அகர முதல 200

ஏதோ உன்னையே
நினைத்துக் கொண்டிருந்தேன்
அதன் பின்னரே
ஞாபகம் வந்தது
கவிதை எழுத
முடிவெடுத்திருப்பது.



*

மூழ்கி போகும் கல் கூட
தன்னைச் சுற்றி
பல "சுற்று வட்டத்தை"
உருவாக்கி விடுகிறது.

*

அந்த மரத்தைச் சுற்றி
வெகு நாள் காய்ந்துக் கிடந்த
விதைகள் தான்
இன்று செடிகளாக
வளர்ந்து நிற்கிறது.

கவிஞர் இரா. மதிராஜ்

அகர முதல 200

# யார் அடிமை?

ஆணுக்கு பெண்
அடிமை என்று
ஆதியிலே
கூறி வைத்தார்கள்.



ஆனால் இன்று
வரதட்சணை
வாங்கிக்கொண்டு
பெண்ணுக்கு
தன்னை
அர்ப்பணிக்கும்
ஆண் அல்லவா
அடிமை?

கவிஞர் திருமதி மோகன்,
நாவலப்பிட்டி (இலங்கை)

# பனைமரம்



ஓங்கி வளர்ந்த மரமாய்
அதிலும் ஓசையிடும்
பறவைகளின் அடைக்கலமாய்
நீ நிற்கிறாயே!
கனியில் சுவைநீர் நிரப்பி
கடும் உடல் வெப்பத்தையும்
குறைப்பதும் நீயே!
நுங்கு வண்டி செய்து
நாங்கள் விளையாடியதும்
உன்னாலே!
பனைவெல்லமாய்
பாரம்பரிய சுவை தருவதும் நீயே!
கஜாபுயல் வந்தபோதும்
காற்றின் வேகத்தில்
பல ஆயிரம்
மரங்கள் விழுந்த போதும்
காற்றின் வேகத்தை எதிர்த்து
விழாமல் கம்பிரமாய் நின்றதும்,
பனைமரம் தானே!
பனை விதைப்போம்.
பயன் பெறுவோம்.

கவிஞர் ரெ. மாணிக்கவேல்,
நீடாமங்கலம்

# அவன்

அன்பை எதிர்பார்க்காமல்
கிடைத்த வரமாகிய வரமே

அன்பை கொடுத்து
ஏற்றுக் கொள்வாயா என கேட்டாயோ

கேட்டதாலோ உன் அன்பை ஏற்க
என் மனமும் வந்ததோ

உன் அன்பை பகிர்ந்து என் அன்பை பகிர்ந்து,
அழகிய நாட்களோ ஓடியது

காலம் முழுவதும் ஓட இருந்த நாட்களை ஓட விடாமல்,
தடுத்தது ஏனோ

எதையும் செய்வோம்
நம் அன்பு இருந்தால் என்று சொன்னால்

அன்பைக் கொடுத்து
எதையும் செய்யாமல் போனது ஏனோ?

எதையும் கேட்காமல் மனம் மனதுக்குள்ளே
அழுது அமைதியே அடைகிறதோ.

ஆனால் ஒன்று,
வருவாய் என்று சொல்கிறது என் இதயம்.

வருவாய் என்று காத்திருக்கும்
எனது ஆன உன் இதயம்.

நாம் பகிர்ந்த அன்புடன் நான்.



கவிஞர் ஷர்மிளா செந்தில்குமார்

அகர முதல 200

# எண்பது இருபது

உலகின் சூத்திரம்
உண்மை புரிந்துகொள்

வென்றிட எண்ணினால்
வேர்வரை தெரிந்துக்கொள்

எண்பது இருபது
என்பது சூத்திரம்

முயன்றவர் நூறு
வென்றவர் இருபது

வியாபார உலகின்
விசித்திரம் இதுதான்

வியாபார லாபத்தில்
விலைவதும் இதுதான்

எண்பது நபர்களால்
இருபது லாபம்

இருபது நபர்களால்தான்
எண்பது லாபம்

பொருத்திப்பார் இதனை
புரிந்துகொள்வாய் வாழ்வில்

வரையறை புரிந்தால்
வாழ்வில் வெல்வாய்

கவலை கொள்வதால்
கடுகளவும் பயனில்லை



கண்களை துடைத்து
மீண்டும் எழுவாய்

எண்பதில் ஒருவனாய்
இறந்துவிடாதே நண்பா!

இருபதில் ஒருவனாய்
எழுந்திரு தெம்பாய்

சூத்திரம் புரிந்தால்
சரித்திரம் நமது

தோல்விக்குள் மறைந்து
தோன்றிடும் வெற்றி

புரிந்தால் சரித்திரம்
பேசும் உனைப்பற்றி

கவிஞர் அ. தனசேகரன்,
அருளவாடி (விழுப்புரம் மாவட்டம்)

# அன்பின் ரசனை

நீரலையின் நாட்டியம்
கண்ணிமை இரசிப்பிலே
எம்பி எம்பி ஏழிசை வாசிப்பில்

தலையாட்டும் மரங்கள்
கரையோர காவலுக்கு
காற்றின் முத்தம் கேட்கும்
நீர்ச்சுழியின் கும்மாளம்
கூப்பாட்டில்

கள்ளமில்லாத வெள்ளந்தி
இவள் சிரிப்பும் கலந்து நின்றது
ரசித்து நின்றவளின்
கலகலத்த புன்னகையில்
சடசடத்த பறவைகள்



அதோ மடித்த
மரத்தின் உச்சியில்
தீர்க்கமான பார்வையில்
பருந்தின் அமைதியும் ஆழமாய்

சுழித்த புருவத்தில்
வார்த்தைகள் கோர்த்துவிட்டாள்
அவளும் ரகசிய புன்னகையில்

தண்ணீர் தீவின் நடுவிலே
சிறிதொரு நிமிடங்கள்
பயபந்துகளின் உருளல்
ரசனைகள் பேசுகின்றன
சத்தங்கள் போடாது

தன்னந்தனியே ஆழும் மனதில்
அம்பெய்த அன்பின் தீண்டலின்
மெய்சிலிர்த்த மேகமும்
துளிக்கொண்டு ஆசிர்வாதம்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,
திருப்பூண்டி (நாகை மாவட்டம்)



அகர முதல 200

# பண்டிகை

இன்றேனும் அது என் வாசல் வருமா
இன்றேனும் அது என் இடை சுற்றுமா
தூக்கத்தில் ஏக்கத்தில் அசை போட்டு வளர்த்ததுவே
புத்தியின் மத்தியில் பசை போட்டு அமர்ந்ததுவே

அள்ள அள்ளக் குறையா அமுதம் கேட்டேனா
அரசிளங்குமரி ஆண்ட பொருள் ஏதும் கேட்டேனா
அதி சிறப்புகள்தன்னை அடுக்கி வைக்க சொன்னேனா

பக்கத்துக்கு தெரு பண்ணையார் மகள் நானோ
பல மாடி வீட்டுக்காரி பவித்ரா நானோ
பட்டணம் தினம் போய் வரும் பரசுராம்
வாத்தியாரின் பாச மகள் பரிமளா நானோ



பேசும் கிள்ளைகாள்
நீவீர் பேசிப் பேசி பெற்றதுதான் என்ன!
எனக்காகத்தான் பேசி பாருமே
சுத்தும் புள்ளினங்காள்
நீவீர் சுத்திச் சுத்தி சுகமென்ன கண்டீர்!
எனதாசை சுற்றி வாருமே

பண்டிகைகள் பல தாண்டி விட்ட உறுதிமொழி
பருவங்கள் பல பார்த்து விட்ட வாய்மொழி
ஏழை உழவனின் ஏதுமறியா மகள் தானே
ஒற்றைக் குடிசையின் ஒத்த வாரிசு தானே

இன்றேனும் அது என் வாசல் வருமா
இன்றேனும் அது என் இடை சுற்றுமா
பள்ளிக்கு சென்று வர ஒரு மிதிவண்டி
பவுசு இல்லாத ஒரு பட்டுப் பாவாடை

இன்று எனக்கு எட்டாவது பொங்கல் பண்டிகை!

கவிஞர் சித்தரேசன், துறையூர்

# தாய்மை

அகமெல்லாம் நிறைந்து
அன்பு வழிந்தோடும்
முகமெல்லாம் மலர்ந்து
மேன்மையாய் வாழ்த்தும்
மருளை நீக்கிடும்
மாண்பமை ஆசானவள்
அருளிடும் சக்தியாய்
அரணாய் இருப்பவள்



அறிவினைப் புகட்டிடும்
அறிவொளிச் சுடரவள்
எரிந்திடும் விளக்காய்
எண்திசை காட்டுபவள்
நல்லதைச் சொல்லி
நேர்மையே சிறப்பென்பாள்
அல்லதை விலக்கிடும்
அன்புருவம் தாய்மை

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு



அகர முதல 200

# மகிழ்வான வாழ்வு

மகிழ்ச்சி என்பது
வெளியில் தேடும் பொருள் இல்லையே.
மனம் மகிழும் நற்செயலும் மகிழ்ச்சிதானே

உதவும் நல்ல குணம் மட்டும் இருந்துவிட்டால்
உண்மையான நேசம் பாசம் நெஞ்சில் நிற்குமே

பகையில்லா பண்பு கொண்ட பழக்கம் மட்டுமே
நட்பு என்னும் பேரானந்தம் கிடைத்திடுமே.

மகிழ்ச்சி என்பது வெளியில் தேடும் பொருள் இல்லையே
ஏழை எளிய மக்களிடம் காட்டும் பாசமே
இறைவனுக்கே தொண்டு செய்த திருப்தி தருமே.

புன்னகையோடு பேசும் வார்த்தை என்றுமே
*பொன்* நகையை விட மதிப்பு உயரும் உலகத்திலே
இனிய சொல் ஒன்றினாலே அன்பு வளர்க்கும் மனதினிலே!



இனிய வாழ்வு நிலைத்திடவே
இதய அன்பு பெருகிடவே
என்றும் உறவு மேம்படவே

இன்னாது சொல் விடுத்து
இனிய சொல் வளர்த்திட்டால்
*மகிழ்வான வாழ்வு* அமைந்திடுமே!

மனதை வெல்லும் அன்பு தான்
வாழ்வில் மகிழ்வை கூட்டுமே.!

மகிழ்ச்சி என்பது வெளியில் தேடும் பொருள் இல்லையே
மனம் மகிழும் நற்செயலும் மகிழ்ச்சி தானே!

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம்,
சேத்தியாத்தோப்பு

# பாதை மாறிய பண்பாடு

அன்னையும் தந்தையும் கடவுளென
அவர்களின் வாழிடமே கோயிலென
முன்னவர் பலரும் உரைத்திட்ட
மூலக் கருத்து போனதெங்கே?

மூத்தோர் சொற்கள் எல்லாம்
முத்து மொழிகள் என்றே
முணுமுணுத்து காலத்தைக் கடந்த
கண்ணியவான்கள் வாழ்க்கை எங்கே?

எண்ணிய செயல்கள் யாவும்
ஏற்புடையதாய் அனைவருக்கும் அமைய
புண்ணிய பாவ கருத்துக்களை
புனைந்து கூறியவர்கள் எங்கே?

அண்ண யாவினும் புண்ணியமென
ஆய்ந்து கூறியே நல்ல
கல்விப் பணிகளை சேவையாய்
செய்த கல்வியாளர்கள் எங்கே?



உண்ண உணவு எல்லோர்க்கும்
உபரியாய் கிடைத்திடவே நல்ல
அளப்பறிய பொதுப் பணிகளை
ஆர்வதோடே செய்தவர்கள் எங்கே?

பண்பாட்டுப் போராட்டம் இன்று
பார் முழுதும் நடந்தாலும்
யார் வீட்டு கதவும்
திறந்துதான் இருப்பது இல்லை.

கவிஞர் செங்குட்டுவன், ஊத்தங்கரை

# ஏகாந்த வேளை

நட்பின் கரங்கள் ஒன்று சேர்ந்தது
நறுமணம் வீசும் தோட்டத்தில்.
விரல் பிடித்து கதை பேசி
உலாவி மகிழும் அந்திசாயும் நேரத்தில்.

தோகை விரிக்கும் தென்னை
மகள் செல்ல சிணுங்கல்கள்.
விண்ணை நோக்கும் வானவேடிக்கை
வண்ண வண்ண ஒளிச்சிதறல்கள்.



கூடு செல்லும் பறவைகள் கூட்டம்
நிலவை மறைக்கும் மேகக்கூட்டம்.
அண்ணாந்து நோக்கும் விழிகளில்
ஆனந்த கண்ணீராய் மழைத்துளி.

சில்லென்ற காற்றில்
அலைமோதும் கூந்தல்.
பிச்சிப்பூவின் வாசத்தில்
பிரியமானவன் பிரிவு நேசத்தில்.

களவு போன நாட்களை மீட்டெடுக்கும்
கைகோர்த்த நட்பின் மேன்மை.
தித்திக்கும் நினைவுகள்
திகட்டாமல் இனிக்கும்.

சொல்லும் ஓர் வார்த்தையில்
தோள் கொடுக்கும் தோழமைகள்.
பூவில் உண்டு பல வாசம்
நம் நட்பில் புன்னகை மணம் வீசும்.

ஏகாந்த வேளையில்
ஏக்கங்கள் தீர்ந்தது..
உடன்பிறவா நட்புக்களின் பந்தம்
உயிர் உள்ளவரை தொடரும் சொந்தம்.

கவிஞர் குணசுந்தரி சிவா, காஞ்சிபுரம்

# தாய்மொழியாம்! தமிழ்மொழி!

"அன்னை மொழியே
அன்பின் மொழியே
ஆயிரமாயிரம் ஆண்டுகள்
கடந்தாலும் உயர்ந்து
தனக்கென தனித்துவத்தை
தக்க வைத்திட்ட
புவனம் போற்றிடும்
தாய்மொழியே தமிழ்மொழியே

உலகின் மூத்தமொழியே
மூப்பில்லா முத்தமிழே
தவழ்கின்ற வயதிலிருந்தே
வழிநடத்தும் தனித்தமிழே
அன்னையென அணைத்து
அரவணைத்திடும் அன்னைத்தமிழே
பிஞ்சு மழலையென
கொஞ்சும் பிள்ளைத்தமிழே

அழகிய குணத்துடன்
அணைக்கின்ற அன்புத்தமிழே
உலகமே வியர்ந்து
பார்க்கட்டும் உன்புகழை
விண்ணுலகம் வரை
ஓங்கி ஒலிக்கட்டும்
வற்றாது பெருக்கெடுக்கட்டும்
தமிழென்னும் அமிர்தம்




இயற்கையைப் போலவே
பரந்து விரியட்டும்
எப்பிறவி எடுத்தாலும்
உந்தன் பிறவி
எப்போதும் மாறாது
அப்படியே இருக்கட்டும்

அயலகம் சென்றாலும்
அணைத்துக் கொள்ளட்டும்
அன்னைத் தமிழே
உனக்கு அடிபணிந்தே
உன்புகழ் பாடியே
நானிருக்க வேண்டும்
முத்தமிழே எப்போதும்
மூத்தவளாய் இருப்பவளே

தமிழன்னையே என்னை
வழிநடத்தும் தாய்மொழியே
உன்னைப் போற்றியே
புகழ் பாடுகிறேன்
தமிழன்னை போற்றியே
வணங்கிக் கொள்கிறேன்
தாய்மொழி போற்றி
வாழிய! வாழியவே


தமிழன்னை போற்றி
வாழிய! வாழியவே!

கவிஞர் அன்புத்தமிழன், தேனி

# பெருந்தலைவர் காமராசர்

விருதுநகர் கண்டெடுத்த கல்வித் தந்தை!
விடியாத மக்களின் விடிவெள்ளியானது விந்தை!

கல்விக்கண் திறந்த படிக்காத மேதை!
மதிய உணவு வழங்கிய வள்ளல்!



கரைவேட்டிக் கட்டிய கறைப்படியாத தங்கம்!
நாட்டுக்கு உழைத்த தன்னலமற்ற சிங்கம்!

பட்டங்கள் பெற்றத்தில்லை
சட்டங்கள் கற்றதில்லை!
தீட்டியத் திட்டங்கள் பல கோடி!

பல்லாயிரம் பள்ளிகள் திறந்தார்
விவசாயம் செழிக்க அணைகள் பல கட்டினார்!

தொழிற்சாலைகள் கட்டி
வேலைவாய்ப்புகள் உருவாக்கினார்!

பெரும் வெள்ளத்தில் மக்களைக் காத்தார்!
தமிழ் மொழியோ கர்ம வீரரின் பேச்சு!
சமத்துவமே அவர் உயிர் மூச்சு!

எளிமைத் தோற்றம் கொண்டு உடலில் வலிமையும்
உள்ளத்தில் உண்மையும் உடையவரே!

புவிக்கோளம் வீழும் வரை!
தமிழினம் வாழும் வரை!
உங்கள் புகழ் இந்த மண்ணில்
ஒலித்துக் கொண்டே இருக்கும்!

கவிஞர் அ. இராபர்ட்கென்னடி, கானூர்

அகர முதல 200

# கனியாதோ காலம்?



என்னத்த நான்சொல்ல? என்னன்னு நான்சொல்ல?
கண்ணீரும் கம்பலையும் காணுறப்போ மனசொடஞ்சி
என்னிக்கு இதுக்கெல்லாம் விடிவுகாலம் பொறக்குமுன்னு
எண்ணி நாமளும்தான் ஏங்குறோமே நாளுந்தான்!
அன்னாடம் காச்சிகளா அலஞ்ச மக்களெலாம்
அந்நாளில் ஒருமரத்துக் கள்ளுன்னு குடிச்சாங்க!
அரசாங்கமே இந்நாளில் கடதொறந்து வித்தாலும்
சரக்குவில அதிகமுன்னு சாயிறாங்க வேறுபக்கம்!
கள்ளச் சாராயம் காய்ச்சியது மாறிப்போய்
கொல்லும் விஷத்தையெல்லாம் கலக்குறாங்க போதைதர!
உடல்வலி  தீருமுன்னு பாவிமக்க அதநம்பி
அடிச்ச சரக்கு அளவுமீறி போததர
குடிச்சவங்க பலபேரும் துடிதுடிச்சு செத்தாங்க!
அதிகாரி, போலீசுன்னு ஆயிரம் இருந்தாலும்
எதுக்கும் பயப்படாம ஏகபோக வியாபாரம்!
மதுவ விடுடா மவராசா எனகெஞ்சி
எதுவும் பயனில்ல! ஏறலயே புத்தியில!
மூத்தவங்க வார்த்தைக்கு மதிப்பில்ல இப்பெல்லாம்!
பெத்தவனே குடிக்கிறப்போ பிள்ளைங்க என்னசெய்யும்?
மொத்தத்துல குடும்பமே மூழ்குதைய்யா துன்பத்துல!
பாத்தவங்க பதறினாங்க! பாவிமக்க துடிக்கிறாங்க!
மதிப்பில்லா நிலையிலதான் மனுஷஉயிர் போச்சுதுங்க!
வித்தவங்க எல்லாருக்கும் விரசா தண்டனைய
உத்தமமா அரசாங்கம் உடனடியா கொடுத்தாதான்
மத்தவங்க பயமுடனே மாறுவாங்க நல்லவனா!
கண்ணெதிர கண்டதால கரையாதோ கல்மனசு?
இனிமேலும் குடிப்பழக்கம் வேணுமின்னு தோணுமோங்க?
தனிமனுஷன் திருந்தினாக்க சமுதாயம் மாறிடுங்க!
இனியேனும் எங்கபேச்ச ஏத்துக்குங்க மவராசா!
கனியட்டும் காலம்! கவலையெலாம் தீரும்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# ஹைக்கூ

மயிலை விரட்டும் மகளின் கைகளில்
நடவுக்காக வைத்திருக்கும்
விதைகள்.

நாயைத் துரத்தும் நாய்
சேதமடைந்தது
பயிர்கள்.

பூவில் நுழைந்து திரும்பும்
வண்டின் கால்களில்
சில மகரந்தத் துகள்கள்.



கவிஞர் ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்

# தேடலில் தொலைதல்

எங்கெங்கோ அலைந்து
தப்புத் தப்பாய் தேடி
தனிமை தேடும் வளியாய்
நாட்களின் போக்கில்
நானும் நகர்கையில்
தேடாமலே கிடைக்கிறாய் நீ
கண்டறியாமலேயே தொலைகிறேன் நான்.
ஆனால் நீயோ
நான் என்பதே
நீ தான் என்று
புதிய பாடம்
சொல்கிறாய்
இலக்கு எதுவாயினும்
விட்டு விடாதே என்னை



கவிஞர் அ. ஈடித் ரேனா,
புதுக்கோட்டை

# அந்த மூன்று நாட்கள்

பிசுபிசுப்பு திரவம் ,
முதுகு தண்டின் நமநமப்பு ,
உடல் அசதிகள் என
கழிகின்றது அந்த மூன்று நாட்கள்
திருவிழாக்கள்,வீட்டு விசேஷங்கள்
என எந்த நிகழ்ச்சிக்கும்
நாட்கணக்கு பாரது
நகர முடிவதில்லை
செத்தும் கெடுத்த சீதக்காதி போல
வந்தும் படுத்தும்
வராமலும் படுத்தும்
எல்லோருக்கும் பொதுவான
செங்குருதியோ எங்களுக்கு மட்டும்
சிவப்பு ,அடர்சிவப்பு, கருஞ்சிவப்பு
என வந்து வந்து போகும்
நாப்கின் விளம்பரபெண்களை போல
ஓடி ஆட ஆசையில்லை
இருக்கும் மிச்ச நாளைபோல
கழிக்க வேண்டிய ஆசை தான்
அந்த மூன்று நாட்களையும்
தொல்லை தரும் மூன்று நாள்
முடிவுக்கு வந்தது
வாலிபம் முடிந்து வயோதிகம்
ஆட்கொண்டது .



கவிஞர் ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்,
தென்காசி

# உலகம் எண்ணிய எண்ணங்கள்

வீட்டுக்கு பின்புறம் குப்பையை
கூட்டி வாரி கொட்டுவா என் தாய்.
சமைக்கிற சன்னல் ஓரம் நிப்பாள் என் மனைவி.
நான் மட்டும் படுக்கையில கிடப்பேன்,
எந்நேரமோ அந்திநேரமோ, எதிர்வீட்டுகாரியோ,
பக்கத்து வீட்டுகாரியோ, உறவுகாரியோ, ஊர்காரியோ.
நலுங்கிற்கோ, திருமணத்திற்கோ, நல்ல காரியத்திற்கோ
ஓடி வந்து அழைப்பாள்.
வாய் நிறைய புன்னகையோடு
வாரோம் வாரோம் என்று
சொல்லி அனுப்பிவிட்டு
ஒருவரை ஒருவர் முகம் பார்த்துக்கொள்வோம்,
கணவனை இழந்த தாயை விதவை என்பாரோ,
ஓராண்டு காலம் குழந்தை இல்லை என்பதால்
என் மனைவியை மலடி என்பாரோ,
அதை காரணம் காட்டி
தன்னை ஆண் இல்லை என்பாரோ,
என்று உலகம் எண்ணிய எண்ணங்களை
எங்களுக்குள் எண்ணி புறக்கணிக்கிறோம்
பல நல்ல நிகழ்வுகளை.
உயிர்ப்புடன் இருக்கிறது
உலகம் தந்த வலிகளும் கேள்விகளும்,
எங்கள் உயிரிலிருந்து பிரிந்து வரும் உயிர்
உலக எண்ணங்களை மாற்றும் என நம்புகிறோம்.



கவிஞர் ஞா. மணிமாறன்,
இரெட்டியூர்

# இரா மதிபாலா கவிதைகள்

01.

நீ
கை வைக்கும்
இடங்களில் எல்லாம்
இயங்கு விசை
பொத்தன்கள்.

தேகத்தை
மிதக்கும் கீ போர்டு
ஆக்குகிறாய்.

இருளில் ஒளிர்கிறது
ரேடியம் தடவி
கைக்கடிகாரமாய்.

உன் அன்பின் முகங்கள்.

02.

இருட்டிடம்
பேசுவது அத்தனை
நிம்மதியாய் இருக்கிறது.

முகம் இரண்டாம் பட்சம்.

அகத்தை அலசி
எடுத்துக் கொள்ளச் சொல்லி
பெருகித் தொடுகிறது
ஆறுதல் நதி.

நதியின் மூலம்
தேவதையின்
மார்பாக இருக்கக் கூடும்.

கவிஞர் இரா மதிபாலா, சென்னை

# புலம் பெயர்வு

பனை மர வரிசைகளின்
ஊடான மணற் பாதை
முடிவில்தான் காணக் கிடைக்கும்
எனது துவக்கப் பள்ளி
செதுக்கிய கல்வெட்டாய்
மனதில் பதிந்த பாடங்கள்
கூடவே உணர்வகளும் நினைவுகளும்
போராட்டமான வாழ்க்கையின்
தடம் புரளலில் புலம் பெயர்ந்தவன்
சொந்த மண்ணில் விருந்தினனானேன்
நினைவுச் சின்னமான பள்ளிக்கு
மீண்டும் செல்கிறேன்
விண்ணெறி குண்டுக்கு இரையாகி
இடிந்துவிட்ட சுவர்களின் மத்தியில்
பூட்டுடன் நிற்கிறது 4- C என்று எழுதிய
பாதி உடைந்த கதவு
பூட்டை மெல்ல அசைக்கிறேன்
எனது இதயத்தில் ஒலிக்கிறது
பள்ளி விடும் மணியோசை
மெல்ல உதிர்ந்து விழுகிறது
தாழ்ப்பாளின் இடுக்கில் சிக்கியிருந்த
தோட்டா ஒன்று
தோட்டாக்களின் பதிவுகளுடன்
சிதைந்த மிச்சமான கரும்பலகையில்
இன்னும் அழியாமல் இருக்கிறது
தாமரை வண்ணத்தில் 'தமிழ் வெல்லும்'
தொடுதிரை உடைந்த செல்பேசியில்
அதிர்வுடன் உள்பெட்டிக்கு வருகிறது
விமான நேரத்தை அறிவுறுத்தும்
மகளின் குறுஞ் செய்தி
இதயத்தில் மீண்டு(ம்) ஒலிக்கிறது
குழந்தைப் பருவத்தின் அதே கடலோசை





கவிஞர் ரவிஜி



அகர முதல 200

# அறிவற்றவன்

கடந்து செல்லும் நேரங்களில்
புரிந்து செல்லும் நேரங்கள் குறைவுதான்
தினம் தினம் ஓர் குறையாகவே
இந்த வாழ்வுநிலை
இரக்கமில்லாமல் வழக்காடுகிறது
வன்மையும் வறுமையும்
இடையிடையே இடைவெளி இல்லாமல்
கண்ணீரும் கலக்கம் இல்லாமல்
கடமை இழக்கிறது
நீ யார் என்பது உணர்த்தும்
அந்த உடன்பாடு
ஒருநாள் இந்த உலகத்தை
அறிய வைக்கும்



கவிஞர் ம. செல்லமுத்து, நுத்தப்பூர்

# பொறாமை வேண்டாமே!

அனைத்தினிலும் வேண்டுபவை வேண்டாதவை பகுப்புண்டே!
தக்கவைகள் தேர்வதுவும் தகாதவைகள் நீக்குவதும்
நன்றாக்கும்! முன்பிரண்டு! அன்னதுவே பரிமாணம்
மூன்றாகிப் பல்கியதே முன்னேற்றம் தன்னாலே!
குணங்களிலும் வேண்டாதவை பலவுண்டே! நீக்கிடுதல்
மேம்படுத்தும் அவற்றிலொன்று பொறாமையே! அழுக்காறு
என்றிடுவோம் அதனையே! அழுக்காறு இலாப்பண்பு
நெஞ்சத்து ஒழுக்காறாக் கொளல்நன்று! யாரிடத்தும்
பொறாமையது கொளாப்பண்பு விழுப்பத்தைச் சேர்த்திடுமே!
மற்றவரின் உடைமைகளில் பொறாமையைக் கொண்டிடுவோன்
அறவழியில் பெறுபவையும் அற்றிடுவான்! தீச்செயலால்
பழிதுன்பம் மண்டிடலால் பொறாமைதனைக் கொள்ளாரே!
பொறாமையது கேடுபயக்கும் என்பதனால் வேறுபகை
வேண்டாவே! ஈத்துவப்பார் ஈகைதனை பொறாமையால்
தடுத்திடுவோர் சுற்றத்தொடு ஊணின்றி உடுப்பிலாது
கேடுசூழும்! பொறாமைகொள் தீத்திறத்தார் ஆக்கமற்று
வறிஞராவர்! பொறாமைசேர் பண்பாளன் சேர்க்கையோ
உடைமையெலாம் அற்றதுவாய் தீச்செயல்கள் ஆற்றிடுவர்!
பொறாமையால் சேர்செல்வம் நல்லொழுக்கம் மிக்கானின்
வறுமையும் கண்டுணர்ந்து செயல்படல் நன்றாகும்!
பொறாமையால் புகழ்வராது! அஃதிலார்க்கு பெருமையின்
தாழ்வதுவும் நண்ணாதே! மற்றவர்காண் வளர்ச்சிவெற்றி
வசதியிவை தாங்காது மனப்பொருமல் ஆற்றாமை
வயிற்றெரிச்சல் என்பவையே பொறாமையாம்! மாந்தரிடை
பொதுவிதுவே! குழந்தைமுதல் துவங்கியது தொடர்ந்திடுமே!
வளர்ச்சிபெற்றிடும்! ஞாலமெலாம் பொதுமைத்து! சந்தேகத்தின்
எதிர்வினையே! விளைவனவோ: பிரிந்திடுதல் இழப்புக்கள்
அச்சமூட்டும் செயல்பலவே! அழுக்காறு தீதாகும்!
பொய்பொறாமை கூட்டான தீயநெறி அஃதாகும்!
வேண்டாமே ஈதென்று தவிர்த்திடுதல் மேம்பாடே!



கவிஞர் கணக்காயர்(இ.சே.இராமன்)



அகர முதல 200

# மா மரக்காதல்

## சிறுகதை

"சுந்தரம்! சுந்தரம்!"
"இதோ வாரேன் , வா ராமசாமி வீட்டுக்குள்ள வா."
"இருக்கட்டும் சுந்தரம் நா மரத்த பாக்க வந்தேன் . இந்த மரத்ததான் சொன்னியா"
"ஆமாப்பா இததான் சொன்னேன். நா கேட்ட காசு கிடைக்கும்ல"
"அது ஒன்னும் பிரச்சனை இல்ல, கேட்ட காச குடுத்துடலாம். மரம் நல்ல வாக்காத்தான் இருக்கு. அப்பறம் நாளைக்கு நம்ம பசங்க வருவாய்ங்க, காச குடுத்துபுட்டு வெட்டிட்டு போய்டுவாங்க, என்ன நா சொல்லுறது."



"நீ சொன்னா சரிதான் பா.", "அப்ப நா வரட்டுமா." "சரி ராமசாமி"
"அப்பா ராமசாமி மாமா ஏன் நம்ம மரத்த சுத்தி சுத்தி பாத்தாரு."
"இந்த மரத்த விக்க போறேன் டா . அதான் அவரு மரத்த பாத்தாரு."
"எம் மரத்த வெட்டப்போறியா? வேண்டாம்ப்பா"
"ஏலேய்! மரத்த வெட்டுனா காசு கிடைக்கும்ல, நீ தான ஸ்கூலுக்கு பீஸ் கட்டனும்னு காசு கேட்ட. மரத்த வெட்ட வேண்டாம்னா காசு யாரு குடுப்பா?"
"போப்பா.. என் மரத்த வெட்டக்கூடாது"
"கிளிபிள்ளைக்கு சொல்லுறமாதிரி சொல்லுறேன், நீ என்னடான்னா சொன்னது மேலயே சொல்லுறவன்.
ஒழுங்கா பள்ளிக்கூடத்துக்கு ஓடுற வழிய பாரு .இங்க நின்னு இப்படி அழுதகிட்டு இருந்த அடிச்சு புடுவேன் பாத்துக்க." மணி அழுத படியே பள்ளிக்கு சென்றான்.
"ஏன்டா மணி அழுதுகிட்டே வார?"
"எங்க வீட்டுல இருக்குற மா மரத்த எங்கப்பா வெட்டப்போறாருடா . நா வேணாம்னு சொன்னா என்ன அடிக்க வாராரு டா ."
"என்னடா சொல்லுற நிஜமாவா வெட்ட போறாரு!", "ஆமாம்டா"

ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்

## சிறுகதை

"மரத்த வெட்டாம காப்பாத்த ஏதாவது ஐடியா குடுடா."
"இப்படி திடீர்னு கேட்டா எப்படி டா. கொஞ்சம் பொறு யோசிச்சு சொல்லுறேன் . இப்ப வா ஸ்கூலுக்கு நேரமாச்சு.லேட்டாச்சுனா அந்த சிடுமூஞ்சி வாத்தி நம்மல வெளில நிக்க வச்சுடுவாரு."
பள்ளிக்கு வந்தும் மணியின் மனம் முழுதும் மரத்தையே சுற்றி வந்தது

"டேய் எனக்கு ஒரு யோசன பேசாம இன்னைக்கு ராத்திரியோட ராத்திரியா அந்தமரத்த சுத்தி செவப்பு சேலை கட்டிவிட்டு சாமி மரத்துல வந்துட்டுன்னு சொல்லுவோம் டா. சாமிக்கு பயந்து மரத்த வெட்ட மாட்டாங்கள்லா. எப்படி என ஐடியா "
"போடா லூசு பயலே உன் ஐடியாவ தூக்கி குப்பைல போடு.", "ஏன்டா"
"என்ன ஏண்டா நோண்டான்னு. எங்க வீட்டுல இருக்குறது மா மரம் அதுல எப்படிடா சாமி வரும் மக்கு சாம்பராணி."
"அட ஆமால. இத நான் மறந்துட்டேன்." "நல்லா மறந்த போடா"
"டேய் அங்க என்னடா குசு குசுனு பேசிகிட்டு இருக்கிங்க"
"ஒன்னும் இல்ல சார்",
"டேய் உண்மைய சொல்லல, வெயில்ல முட்டுக்கால் போடனும் பாத்துக்கோங்க."
"சார் இவங்க வீட்டுல இருக்குற மாமரத்த வெட்ட போறாங்களாம் அதான் சார் அத எப்படி தடுக்கனு பேசிட்டு இருந்தோம். "
"ஆமா டா நீங்க ரெண்டுபேரும் இந்தியா பாடர்ல இருக்கிங்க பாரு இராணுவ ரகசியம் பேச .ஒழுங்க பாடத்த கவனிக்கல ஒத படுவிங்க பாத்துக்கோங்க.இங்க உசிர குடுத்து பாடம் எடுத்தா மரத்த காப்பாத்துறேன், கிணத்த காப்பாத்துறேனு கதை அளக்குறிங்களா போய் உக்காருங்கடா."
"சரி சார்"
பள்ளி முடிந்து மணி தன் நண்பனுடன் வீடு திரும்பினான்.

ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்

## சிறுகதை

கருக்கல் நேரம் இருவரும் மாமரத்தடியில் அமர்ந்து பேசிக்கிட்டு இருந்தனர்.

"என்னடா எப்படி யோசிச்சாலும் ஒரு ஐடியாவும் கிடைக்க மாட்டுக்கு.என்னடா பண்ண ."

"அதான் டா எனக்கும் என்ன பண்ணனு தெரியல இருட்டியும் போச்சு விடிஞ்சா ஆளுங்க எல்லாம் வந்துடுவாங்க."

"டேய் அங்க என்னடா மரத்துக்கு கீழ மாநாடு படுக்க வாடா", "வாரேன் மா"

"சரிடா .நானும் வீட்டுக்கு போறேன்."

"அம்மா", "என்னடா?", "அம்மா அப்பாக்கிட்ட சொல்லுமா மரத்த வெட்ட வேண்டான்னு."

"டேய் வாய மூடிட்டு தூங்குடா."

"மரத்த வெட்டியா இனி நா பள்ளிக்கூடத்துக்கு இந்த போக மாட்டேன்."

"நீ அடி வாங்காம தூங்க மாட்டியா .பேசாம தூங்குடான்னா."

பொழுது விடிந்தது !

"மணி டேய் மணி எந்திரிடா ஸ்கூலுக்கு நேரமாச்சு"

"நா ஸ்கூலுக்கு போகமாட்டேன்", "ஏன்டா, இப்படி காலங்காத்தல அழுகுற"

"நா சொல்ல சொல்ல கேக்காம மரத்த வெட்டுனிங்கள்ள. இனி நா ஸ்கூலுக்கு போகமாட்டேன்."

"டேய் யாருடா மரத்த வெட்டுனா. மரத்தலாம் யாரும் வெட்டல உங்க வாத்தியாரு காலைல வந்தாரு . வந்து டியூசன் நடத்த இடம் வேணும் மரத்தடிய வாடகைக்கு குடுங்கன்னு கேட்டாரு அப்பாவும் சரின்னு சொல்லிட்டாரு. இனி அழாத ஒடு ஸ்கூலுக்கு நேரமாச்சு."

"ஐய்யா..! ஜாலி... அம்மான்னா அம்மா தான்."

"டேய் நா என்னடா பண்ணுனேன். எல்லாம் உங்க வாத்தியாருதான் பண்ணாரு போயி அவருக்கு நன்றி சொல்லு."

ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்

# மா மரக்காதல்

## சிறுகதை

"சரிமா நா ஸ்கூலுக்கு போறேன். ரவிக்கும் போயி இத சொன்ன ரொம்ப சந்தோஷப்படுவான் மா."
"சரி சரி போடா",
"ரவி டேய் ரவி"
"என்னடா ஏன் இப்படி ஓடி வார உங்கப்பா மரத்த வெட்டிட்டாரா.?"
"உன் வாய கழுவுடா . எங்கப்பா மரத்த வெட்டல நம்ம சிடுமூஞ்சி வாத்தியாரு மாமரத்துக்கு கீழ டியூசன் எடுக்க வாடகைக்கு கேட்டாறாம் எங்கப்பாவும் சரிவு சொல்லிட்டாறாம்டா"
"என்னடா சொல்லுற அந்த நம்பியார் எப்படி டா எம்.ஜி.ஆர் ஆ மாறுனாரு."
"அவரு எப்படி மாறுனா நமக்கு என்னடா .மரத்த வெட்டலல்லா நமக்கு அது போதும்."




ரா. சண்முகவள்ளி ஸ்ரீனிவாசன்

# டி.கே.சிதம்பரநாத முதலியார்

## கட்டுரை

டி.கே.சி என்ற டி.கே.சிதம்பரநாத முதலியார், ரசிகமணி. தமிழறிஞர், இலக்கிய விமர்சகர், சொற்பொழிவாளர். தமிழில் மரபிலக்கிய ரசனையில் புதிய பார்வையை கொண்டுவந்தவர். ரசனை வாசிப்பை ஓர் இயக்கமாகவே முன்னெடுத்தவர். நவீன இலக்கியத்திற்கும் மரபிலக்கியத்துக்கும் தொடர்பை உருவாக்க முயன்றவர். வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

### பிறப்பு, கல்வி:



திருநெல்வேலி வண்ணாரப்பேட்டை தீத்தாரப்ப முதலியார், மீனாம்பாள் இணையருக்கு செப்டெம்பர் 11, 1881-ல் (ஆவணி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் கிருஷ்ணஜெயந்தி அன்று) ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை தென்காசியிலும், உயர்நிலைக்கல்வியை திருநெல்வேலியிலும் முடித்தார். திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் எஃப்.ஏ முடித்தார். 1905-ல் முதல் பட்டப்படிப்பை (B.A) சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் படித்தபின் சட்டப்படிப்பை (B.L) திருவனந்தபுரத்தில் முடித்தார். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பயில்கையில் தமிழ்ப் பேரவைத் தலைவராக பணியாற்றினார். மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவிய பாண்டித்துரைத் தேவருக்கு தமிழ்ப் பேரவை சார்பில் வரவேற்பு நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

திரு. குமர. தர்மசீலன், இதழாசிரியர்

**தனிவாழ்க்கை:**

டி.கே.சி 1908-ல் தனது மாமாவின் மகளான பிச்சம்மாளை திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு 1909-ம் வருடத்தில் தீபன் என்ற தீத்தாரப்பன் பிறந்தார். தன் தாய்மாமன் ஊரான ஸ்ரீவில்லிப்புத்தூரில் சிறிது காலம் வாழ்ந்த டி.கே.சி பின்னர் திருநெல்வேலி வண்ணார்பேட்டையில் வழக்கறிஞர் பணி புரிந்தார்.மலேரியா காய்ச்சல் வந்தமையால் தொழிலை விட்டுவிட்டார். இக்காலகட்டத்தில்தான் முழுநேர இலக்கிய ஆய்வில் ஈடுபட்டார்.

டி.கே.சி 1928 முதல் 1930 வரை சட்டமேலவை உறுப்பினராகப் பணியாற்றினார். 1930 முதல் 1935 வரை இந்து அறநிலையத்துறை ஆணையர் பணியில் இருந்தார். 1941-ம் ஆண்டு தன் மகன் தீபன் இறந்த பின்னர் குற்றாலத்தில் குடும்ப இல்லத்தில் தன் மகனின் பிள்ளைகளுடன் வாழ்ந்தார். குற்றாலம் அவருடைய இலக்கியச் சந்திப்பு மையமாக அமைந்தது.

**இலக்கியவாழ்க்கை:**

டி.கே.சிதம்பரநாத முதலியார் முதன்மையாக இலக்கிய வாசகர். கம்பராமாயணம் உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியங்களை ரசிப்பதும் அவற்றைப் பற்றி உரையாடுவதுமே அவருடைய வாழ்க்கையாக இருந்தது. இலக்கிய உரையாடலுக்கான நண்பர்க்குழாம் அவருக்கு எப்போதும் இருந்தது. மிகக்குறைவாகவே அவர் தன்னுடைய ரசனையை பதிவுசெய்திருக்கிறார். அவையும் ரசனைக்குறிப்புகள் மட்டுமே. இலக்கிய விமர்சனத்திற்குரிய ஒப்பீட்டுப்பார்வை, ஆய்வுப்பார்வை, தொகுப்புப்பார்வை கொண்டவை அல்ல அவருடைய எழுத்துக்கள்.

திரு. குமர. தர்மசீலன், இதழாசிரியர்

## கட்டுரை

### வட்டத்தொட்டி:



1924 முதல் திருநெல்வேலி வண்ணாரப்பேட்டையில் குடியிருந்த காலகட்டத்தில் டி.கே.சி தன் வீட்டில் இலக்கியசங்கம் என்னும் அமைப்பை தொடங்கினார். ஆனால் அது அவர் இல்லத்தின் நடுமுற்றத்தில் நிகழ்ந்தமையால் பேச்சுவாக்கில் வட்டத்தொட்டி என்று அழைக்கப்பட்டு அவ்வாறே நீடித்தது. திருநெல்வேலியில் அன்று வாழ்ந்த இலக்கிய ஆர்வலர்களும், சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார், கல்கி போன்ற இலக்கியவாதிகளும் அங்கே வந்தனர். அங்கே இலக்கிய ரசனைவிவாதம் நடைபெற்றது.

### கம்பராமாயண ஆய்வு:

டி.கே.சி தமிழில் முதன்மையான படைப்பாக கம்பராமாயணத்தையே கருதினார். தொடர்ந்து அதில் ரசனை ஆய்வு செய்துவந்தார்.கம்பராமாயணத்தில் இடைச்செருகல்கள் என சில பாடல்களை வகுத்து,அவற்றை நீக்கி, புதிய கம்பராமாயணப் பதிப்பை வெளியிட்டார்.

### கடித இலக்கியம்:

தமிழிலக்கியத்தில் டி.கே.சியின் கொடை என கருதப்படுவது கடித இலக்கியம். டி.கே.சி கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை , கல்கி, ராஜாஜி போன்றவர்களுக்கு எழுதிய கடிதங்கள் இலக்கியத்தரம் வாய்ந்த விரிவான ரசனைக்குறிப்புகள் மற்றும் அனுபவப்பதிவுகள்.

திரு. குமர. தர்மசீலன், இதழாசிரியர்

கட்டுரை

**கலைச்சொல்லாக்கம்:**

ஆங்கில, சம்ஸ்கிருதச் சொற்களுக்கு மாற்றாகத் தமிழ்ச் சொற்களை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். Radio என்ற சொல்லுக்கு வானொலி, Culture என்ற ஆங்கிலச் சொல்லுக்கு கலாச்சாரம் பின்னர் பண்பாடு போன்ற சொற்களை அவர் உருவாக்கினார்.

**இதழியல்:**

டி.கே.சி கலைமகள் இதழின் ஆசிரியர் குழுவில் இருந்தார். வசந்தம் என்கிற மாதஇதழின் ஆசிரியர் பொறுப்பில் இருந்தார்.

**தமிழிசை இயக்கம்:**

டி.கே.சி தமிழிசை இயக்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார். கவிதைச்சுவையும் இசைச்சுவையும் தாய்மொழியில் மட்டுமே ரசிக்கப்பட முடியும் என தொடர்ந்து வாதிட்டார்.

**கல்விக்கொள்கைகள்:**

டி.கே.சி கல்வி பற்றிய திட்டவட்டமான கொள்கைகள் கொண்டிருந்தார். எந்தக் கல்வியும் தாய்மொழியில் மட்டுமே அளிக்கப்படவேண்டும் என்று தொடர்ந்து வாதிட்டார். மரபிலக்கியம் கற்றுக்கொடுக்கப்பட்டு அதன் நீட்சியாகவே நவீனக் கல்வி அளிக்கப்படவேண்டும் என்றார். பள்ளிக் கல்வியில் நம்பிக்கை அற்றிருந்த டி.கே.சி முடிந்தால் குழந்தைகளுக்கு பெற்றோர் இல்லத்திலேயே கல்வியளிப்பதே சிறந்தது என வாதிட்டார்.

திரு. குமர. தர்மசீலன், இதழாசிரியர்

# டி.கே.சிதம்பரநாத முதலியார்

## கட்டுரை

**அமைப்புப்பணிகள்:**

எட்டையபுரத்தில் பாரதியாருக்கு மணிமண்டபம் அமைக்கும் பணி அவற்றில் முக்கியமானது

**ஆன்மிகம்:**

டி.கே.சி தன் நண்பரும் குருவுமான ஈஸ்வரமூர்த்தியா பிள்ளையிடம் சைவ உபதேசம் பெற்றுக்கொண்டார்.

**இலக்கிய இடம்:**

தமிழில் பதிப்பியக்கம் 1850 -ல் தொடங்கியது, அவற்றில் பல உலகப்பேரிலக்கியங்கள். அவற்றை வாசிப்பதற்கான மரபும் பயிற்சியும் பொதுவான வழிமுறைகளும் தமிழ் அறிவுச்சூழலில் இருக்கவில்லை. டி.கே.சி. மரபிலக்கியத்தை ஒட்டுமொத்தமாக மூத்தோர்சொல் என கருதி கொண்டாடுவதற்கு மாற்றாக ரசனை அடிப்படையில் அணுகி ஏற்பும் மறுப்புமாக மதிப்பிட வழிகாட்டியவர்.

**நூல்கள்:**

**எழுதியவை**

- அற்புத ரஸம்
- இதய ஒலி
- கம்பர் யார்?

**பதிப்பித்தவை**

- கம்பர் தரும் ராமாயணம் - பாகம் 1-3
- முத்தொள்ளாயிரம்
- தமிழிசைப் பாட்டுக்கள்
- தமிழ்க் களஞ்சியம்
- கடித இலக்கியம்
- ரசிகமணி கடிதங்கள்

திரு. குமர. தர்மசீலன், இதழாசிரியர்

**மறைவு:**

டி.கே.சிதம்பரநாத முதலியார் பிப்ரவரி 16,1954-ல் மறைந்தார். அவருடைய சமாதி குற்றாலம் பழைய அருவி சாலையில் அமைந்துள்ளது.







திரு. குமர. தர்மசீலன், இதழாசிரியர்

அகர முதல இலக்கியப் பேரவை
தமிழ் வெல்க வெல்கவென்றே தினம் பாடு!

# நாளை நமதே

## முடிவே இல்லாத
## ஒரு வார்த்தை.
## முயற்சி.

அகமும் தமிழே                                    முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு    அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு    சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com